பதிவு எண்—ம. 5720 வெள்ளிக் கிழமையில் MADRAS ... தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு :- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—4 குருகுலம், மாம்பாக்கம் ; நந்தன, ஆடி ; 25—7—52. தளிர்—43

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## பெருந்துணை

உலகில் மக்கள் எல்லா நன்மைகளும் குறைவற வாய்ந்து, வேறொருவர் உதவி நாடாமல் வாழ்வதாக எண்ணிவிட முடியாது. சூழ்நிலைகள் பலவை வேறுபிறர் உதவியை எதிர்பார்க்கும் வகையில் கொண்டுவந்து விடுகிறது.

எத்துணையோ பேர் வயிற்றுப் பிழைப்பிற்காகத் தகுதியில் மேம்பட்டார் பலரிடம் குற்றேவல் புரிந்து காலங் கடத்துகின்றனர். தெரிந்தோ தெரியாமலோ இவர்கள் செய்யும் சிறு குற்றங்கள் காரணமாகப் புரப்போர் இவர்களைத் தம்மிடமிருந்து நீக்கி விடுவதாக வைத்துக் கொள்வோம். இவர்களை யார் அன்போடு அழைத்துக் காக்கக் கூடும்? இல்லறத்தான் தவிர வேறு பிறரால் இவர்கள் தொடர்பாக என்னதான் செய்யக்கூடும்? இல்லறத்தானன்றோ இவ்வாறு காத்தலைத் தன் அரியபேறாகக் கருதுவான்!

உண்ண உணவு கிடைக்காத மிடிமையாளர்க்கும் இல்லறத்தானே துணையாகின்றான். அவ் வறியர்க்கு உணவு முதலியன உதவி நாட்டுக் குடிமக்கள் செயல்களில் அவர்களும் பங்கு கொள்ளத் தக்க நிலையில் அவர்கள் தரத்தினை உயர்த்தி நல்வழியில் உய்க்க இல்லறத்தானால் அன்றி வேறு பிறரால் முடியுமா?

திக்கற்ற நிலையில் இறந்து பட்டவர்க்கு உரிய இறுதி நாட்கடன்களை இல்வாழ்வாரே தமக்குரிய பெருந் தொண்டாக மேற்கொண்டு செய்வதை இன்றும் பார்க்கிறோம்.

ஆகவே, பிறரால் துறக்கப்பட்டவர், வறியோர், திக்கற்று இறந்தவர் ஆகியோர்க்கும் இல்வாழ்வானே உறுதுணையாதல் சான்றோர் கருத்தாகின்றது.

துறந்தார்க்கும் துவ்வா
தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை.

துறந்தார்க்கும் — களைகண் ஆனவரால் துறக்கப்பட்டாருக்கும் துவ்வாதவர்க்கும் — நல்கூர்ந்தார்க்கும்; இறந்தார்க்கும் — ஒருவரும் இன்றித் தனியாகத் தன்பால் வந்து இறந்தார்க்கும்; இல்வாழ்வான் என்பான் துணை.— இல்வாழ்வான் என்று சொல்லப்படுபவன் துணையாவான்.

களைகண் — துணை; நல்கூர்ந்தார் — வறியவர். துவ்வாதவர், எதிர்மறை வினையாலணையும் பெயர்.

துறந்தார்க்குப் பாவம் ஒழிய அவர்க்குத் துணையாய் நின்று வேண்டுவன செய்தலானும், துவ்வாதவர்க்கு உணவு முதலியன கொடுத்தலானும், இறந்தார்க்கு இறுதிக் கடன்களைச் செய்து உதவுதலானும் ‘துணை’ என்றார். ஆகவே இல்வாழ்தல் எல்லா உபகாரத்துக்கும் உரித்தாதல் கூறப்பட்டது. ஏனைய நிலைகளில் இருப்போர்க்கு, இவ்வாறு உதவுதல் கூடாது என்பதும் இதனால் பெறப்படும்.

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

**4-ம் ஆண்டுக் கையொப்பம்**

**(5-10-51 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள் — கையோப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி :—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.


| கிளை | நந்தன, ஆடி, | தளிர் |
|---|---|---|
| 4 | 25-7-52 வெள்ளி | 43 |


# யாம் கண்ட - - - - நல்லோர்

**(தொண்டமண்டலச் செலவின் குறிப்புகள்—2)**

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே"

எங்கள் குருகுலத் தலைவர் ஆசிரியர் இளவழகனார் அவர்களின் தொண்டமண்டலத் திருச்செலவு பற்றி முன்னரே இவ் விதழ்வழி நேயர்கள் அறிந்திருப்பார்கள். திருக்கழுக்குன்றத்தில் ஆனி மகந்தோறும் நடைபெறும் திருமுறைப் பெருவிழா பற்றிக் குறைந்த அளவு தொண்ட மண்டலத்திலுள்ள திருவூர்ப் பெருமக்கள் வரையிலாவது தெரிவிக்க வேண்டும் என்ற பேரார்வத்தினால் அவர்கள் 2-6-52 அன்று முதல் திடுமென முன்னேற்பாடுகள் எதுவுமின்றித் தமது திருச்செலவை மேற்கொண்டு, தொண்ட மண்டலத்திலுள்ள 32 பாடல் பெற்ற தலங்களையும் 26-6-52 தேதிக்குள் சுற்றி வந்து விட்டார்கள், குறைந்த அளவு ஒன்பது முதல் — நூற்றுக்கு மேற்பட்ட அன்பர்கள் வரை வாய்ப்புள்ளவர்கள் எல்லாம் அதில் தொடர்ந்தும் விட்டு விட்டும் அங்கங்கு வந்து கலந்து கொண்டும் ஈடுபட்டார்கள். அச் செலவினால் ஏற்பட்ட பயன்களில் அருட் பயனுக்கு (அதை விளக்கிச் சொல்லலோ எடுத்துக் காட்டலோ முடியாமல் ஒரு சிறிது உணரமட்டுமே முடியும் ஆதலின்) அடுத்தபடியில் வெளிப்படையாக உள்ள பெரும் பயனாகிய நல்லோர் காட்சி பற்றி மட்டும் முதலில் நன்றி முறையில் இவ் விதழில் சிறிது தொடர்ந்து எழுத எண்ணுகின்றேன். வாய்ப்புக் கேற்பத் திருச் செலவுபற்றிய பிற குறிப்புகளும் தொடர்ந்து வரும். இத் திருச் செலவில் தொடர்ந்து கலந்து கொள்ளும் பேறு (இரண்டு திருவூர்கள் தவிர) எளியேனுக்கும் எப்படியோ கிடைத்தது. பல வகையிலும் அவ்வளவு நெருக்கடியான நிலை என்னுடையது. திருவருளின் துணையும், ஆசிரியரின் வலிந்த அருள் அணைப்பும், உதவியுமே அதற்குக் காரணம் என்று சுருக்கமாகக் குறிப்பிட்டுவிட விழைகின்றேன்.

எங்கள் திருப்பயணத்தால், வாழ்க்கை முறைகள் மிகவும் வேறுபட்டு எவ்வளவோ எதிர்ப்புகளும் தோன்றி யிருப்பினும் திருநெறிப் பற்று மக்கள் பால் அருகிவிட வில்லை. நன்றாகப் பதிந்தே இருக்கிறது; துலக்குவார் இன்மையின் மங்கி வருகிறது; தக்க முறையில் துலக்கினால் அது, இடைக்கால மாசுகள் நீங்கி மீண்டும் நன்றாகச் சுடர் விட்டு ஒளிரும்; அதற்கு ஏற்ற துணையாக 1600 ஆண்டுக்கு முற்பட்ட சைவ சமய குரவர்களாகிய நால்வர் பெருமக்களின் அரிய தொண்டு, ஆழமும் ஆற்றலும் கொண்டு நாடு முழுதும் வேர் விட்டுப் பதிந்திருக்கின்றது என்றெல்லாம் கண்டோம். அவர்கள் பாடல்களின் அளப்பரிய பேராற்றலை உணர்ந்து வியந்து உருகினோம்.

சென்ற திருவூர்களில் எல்லாம் நாங்கள் பல அன்பர்களைப் பல்வேறு நிலையிலும் முறையிலும் கண்டு அளவளாவி மகிழ்ந்தோம், எங்கள் போக்கில் நல்ல ஊக்கமும் உணர்ச்சியும் பெற்றோம். சிறப்பு முறையில் நெருக்கமாகப் பழகியவர்கள், உள்ளங்கலந்த உறவு கொண்டவர்கள், இயன்ற உதவி செய்தவர்களைப்பற்றி மட்டும் ஈண்டுக் குறிப்பிட விழைகின்றேன்.

### திருவொற்றியூரில் : (2 6 52)

எங்கள் செலவின் முதல் திருப்பதியாக அமைந்த திருவொற்றியூரில் சென்னைச் சிவனடியார் திருக் கூட்டத்தாரும் எங்கள் குருகுலத்தாருமாக ஏறத்தாழ நூறுபேர் வழிபாட்டில் கலந்து கொண்டனர். சற்றும் எதிர்பாராத வகையில் எழுத்

தறியும் பெருமானின் திருக் கோபுரவாயிலுக்குள் நுழைந்தவுடன், நால்வர் நெறி செல்லும் எம் ஆசிரியரை எதிர் கொண்டு அன்பர் ஒருவர் ஆராக் காதலுடன் "மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து" என்னும் திருவாசகத் திருச் சதகப் பாடலில் வரும் மெய்ப்பாடுகளுடன் அணுகிப் பக்கத்தில் இருந்த நால்வர் கோயிலைக் காட்டி அங்கே அழைத்துச் சென்று, ஆசிரியருக்கு மலர் மாலையிட்டும், திருவடி பூசை செய்தும், நால்வர்களுக்கு ஒளி காட்டியும், உணர்ச்சி வசப்பட்டு "சைவ சமயமே சமயம்" என்னும் தாயுமானார் பாடலைப் பாடியும், பன்னிரு திருமுறைத் திரட்டு, பட்டுத் திருநீற்றுப்பை, தாளம் இவற்றை ஒரு தட்டில் வைத்துக் கொடுத்தும் வணங்கினார். திருக்கோயில் வழிபாட்டுக்கிடையிலேயும் அவர் உருக்கத்தோடு திருமுறைப் பாடல்களை இடனறிந்து முன்வந்து பாடி ஈடுபாட்டைச் செய்தார். முதல் பதியில் முதல் நிகழ்ச்சியாக நேர்ந்த இவ்வன்பரின் செயல் எமது திருச் செலவிற்குத் தக்க ஒரு நற்குறிப்பாக இருந்தது. அன்பர்கள் பலருக்கும் உணர்ச்சியை மிகுத்தது. காலடிப் பேட்டையைச் சேர்ந்த திரு. வேதாசலம் என்னும் அவ்வன்பர், தம்மாலியன்றவரை எங்களோடு தொடர்ந்து, சில திருப் பதிகளுக்கும் வந்தார்.

(தொடரும்)

—ஆடலரசு.

---

# இன்றைய சீனா

"இளம்பூரணன்"

நம் இந்தியத் துணைக்கண்டத்தைப் போலவே மிகத் தொன்மையான நாகரிகமும் இதனைக் காட்டினும் மிகுதியான சன நெருக்கமும் வாய்ந்தது சீன நாடாகும். வாழ வகையற்ற வறியவர் நம் நாட்டைக் காட்டிலும் சீனாவில் மிகுதி. மக்கள் பெருக்கத்துக் கேற்ப வாழ்க்கை வசதிகள் பெருகாமலும் அத்தகைய வசதிகள் பெருக்குவதற்கேற்ற வாயில்கள் உணராமலும் அந்நாட்டு மக்கள் பட்ட தொல்லைகள் சிறிதளவன்று. உண்ண நல்லுணவு கிடைக்கப் பெறாத மக்கள் நாய் பூனை இவைகளின் ஊனைத் தின்றும் உயிர் வாழ்ந்தனர். 1893ம் ஆண்டில் சிகாகோ செல்லும் வழியில் விவேகாநந்த அடிகள் சீனா தேசத்துக் காண்டன் (canton) நகரை நேரிற் கண்ட போது, மேற் கூறியபடி, நாய் பூனை இவற்றின் ஊன்களை விற்கும் இடங்கள் அந் நகரில் மலிந்திருந்தமையைக் குறிப்பிட்டுள்ளார். சுகாதார வசதிகளும் பாழ்பட்ட நிலைமையில் இருந்ததாக அடிகள் கூறியுள்ளார்.

மிக அண்மைக்காலம் வரையில் இந்நிலைமை சீனாவில் மாற்றம் அடைந்ததாகத் தெரியவில்லை. அதாவது சியாங்-கே-ஷேக் ஆட்சிக்காலம் வரையில் சீனா எத்தகைய முன்னேற்றமும், மக்கள் வாழ்க்கைச் சீரமைப்பும் பெற்றதாக உலகம் கருத இடமில்லாமல் இருந்தது. அந்நாட்டு மக்கள் பட்ட வருத்தத்தினை எண்ணி உலகப் பொது மக்கள் கண்ணீர் வடித்தனர். உலகின் செல்வமிக்க பகுதிகளிலிருந்து கூடுமான உதவிகளும் ஆறுதல் மொழிகளும் அந்நாட்டுக்குச் சென்றன. வாழ்க்கைக்கு வேண்டிய தேவைகளும் வாய்ப்புகளும் ஏழைகட்கு எட்டாத நிலையில், ஒரு சாரார்க்கு மட்டும் அடுக்கடுக்காக உயர்ந்தோங்கின.

உணர்வு மாழ்கி உறங்கிக் கிடந்த சீனா இன்று விழிப்படைந்து விட்டது. பேரறிஞர் மா-சே-துங்கின் அறிவாற்றல் மிக்க தலைமையில் வியத்தகு முறையில் குறைந்த அளவான இரண்டாண்டுகளில் சீனா எய்தியுள்ள விழிப்பும் பெருமையும் அறிஞர்கள் போற்றத்தகுந்ததாகும்.

வார்தாவிலுள்ள அகில இந்திய கிராமக் கைத் தொழிற் சங்கத் தலைவரும் காந்தியடிகள் காட்டிய நெறியிற் செல்வோருமான டாக்டர் ஜே. ஸி. குமரப்பா அண்மையில் பம்பாயில் நடைபெற்ற இந்தோ-சீனா உறவுச் சங்க மாநாட்டைத் திறந்து வைத்தபோது, தாம் அண்மையில் சீனாவுக்குச் சென்று நேரிற் கண்ட செய்திகளைக் கூறியுள்ளார். காந்தியடிகளின் திட்டங்களைச் சீனம் நேர்மையான முறைகளிற் பின்பற்றி ஒழுகும் சிறப்பினைத் தெளிவாக்கியுள்ளார். ஏழை எளியவர், செல்வர் என்னும் வேறுபாடு அந் நாட்டில் பெரும்பாலும் மறைந்து விட்டமையும், நாட்டுப் பொருளாதாரமும் விவசாயமும் பல படியாக உயர்ந்துள்ளமையும் அவர் குறிப்பிட்டார்.

சில ஆண்டுகட்கு முன் பிற நாடுகளிடம் கையேந்தி இரந்த சீனம், இன்று தன் நாட்டுத் தேவை போக மிகுதியாக எஞ்சியுள்ள உணவுப் பொருள் முதலியவற்றைப் பிற நாடுகளுக்கு உதவும் நிலையில் இருக்கிறது.

---

# * பெண் கல்வி *

க. அமுதாம்பிகை

நாகரிகத்தின் சின்னங்கள் சிறிதும் தோன்றாத நாட்டுப் பகுதிகளில் பெண்கள் பெரிதும் மிருகத்தனமாக நடத்தப் பெறுகின்றனர். அங்கெல்லாம் ஆடவர் வேலை ஒன்றும் செய்யாமல் சோம்பிக் கிடக்க எத்தகைய வேலைகளும் பெண்களாலேயே செய்யப்படுகின்றன. கல்வி என்பதனை அவர்கள் கனவிலும் அறியார். நாகரிகம் முதிர்ந்துள்ள ஐரோப்பா அமெரிக்கா முதலான நாடுகளிலோ ஆடவருக்குச் சமமாகப் பெண்டிரும் கல்வி பயின்று எவ்வகைத் துறையிலும் தாம் ஆடவரினும் குறைந்தவரல்லர் என்று உலகம் போற்றும்படி வாழ்கின்றனர்.

நாகரிகமே காணாதது, நாகரிகத்தின் உச்ச நிலையடைந்தது என்னும் இருவேறு இயற்கைகளை உடைய நாடுகளில் பெண்களின் நிலைமை மேற் கூறியபடி இருக்க, மிகப்பழைய காலந் தொட்டு நாகரிகம் வாய்ந்ததாகக் கருதப்படும் நம் இந்தியப் பெருநாட்டில் பெண்கள் நிலைமை மேல் இரண்டு நிலைகட்கும் நடு நிலைமை வகிக்கின்றது.

நம் நாட்டு மகளிர் உண்ணல் உடுத்தல் அணி பணிகளை யணிதல் ஆகிய செயல்களில் சிறப்பாகவே நடத்தப் பெறுகின்றனர். ஆனால் கல்வி நிலையில் மிக மிகத் தாழ்வான நிலையிலேயே வைக்கப்பட்டுள்ளனர். பெண் கல்விக்கான முயற்சிகளும் ஆமை வேகத்தில் சென்று கொண்டிருக்கிறது.

மக்களை மாக்களினின்றும் வேறு பிரித்து நாகரிக வாழ்வு வாழும்படி உதவுவது கல்வி. இது எல்லார்க்கும் பொதுவானது. இதனை ஆண்கள் தாம் பெறுதற்குரியர் என்பது சிலரின் கருத்து. அங்ஙனமாயின் பகுத்தறிவோடு வாழும் உயிருக்குக் கண்ணேபோல் சிறப்பு வாய்ந்த கல்வியை ஆடவர் மாத்திரம் கற்று அறிவுக் கண் வாய்ந்து நல்ல முறையில் வாழும்போது மாதரினம் கல்வி பெறாமல் மாக்களாய், அறிவுக்கண் இன்றிக் குருடாக வாழ்தல் அறிஞர்க்கு உவப்புடைய செயலாகுமா?

எண் என்ப ஏனை எழுத்தென்ப
இவ்விரண்டும் கண் என்ப
வாழும் உயிர்க்கு.

என்பது பொய்யில் புலவன் பொருளுரை யன்றோ!

ஔவையார், ஆதிமந்தியார் நச்செள்ளையார் போன்றார் சங்க காலத்தும், அதற்குச் சிறிது பின்னிட்டுக் காரைக் காலம்மையார் போன்றாரும், இன்னும் சில நூற்றாண்டுகட்குப்பின் ஆண்டாள் போன்றாரும் தோன்றிப் பெண்குலத்தின் அறிவு மாட்சிமையை உலகறியச் செய்திருந்தும் பெண் கல்விக்குப் பகையாயிருக்கும் புல்லியர் செயலை என்னென்பது!

பெண்ணினம் விழித்துக் கொண்டது. தன் பெருமையை உணரத் தொடங்கி விட்டது. வான் முகிலிடையே பளிச் சென்று தோன்றி மறையும் மின்னொளியைப் போல அவ்வக் காலங்களில் ஞானச் செல்வியர் பலர் தோன்றி மறைந்த பெண்ணினத்தின் பெரு மதிப்பினை எண்ணத் தொடங்கி விட்டது.

பெண்கள் படித்து அலுவலாற்றிப் பொருளீட்டவா போகின்றார்கள்? கல்வியால் அவர்கள் பெறும் நன்மையாது? அடுப்பூதும் பெண்டிர்க்குப் படிப்பெதற்கு? என்றெல்லாம் வெற்றுரையாடுவார் பலர். அத்தகைய பிற்போக்காளர் உள்ளம் விம்மிதமும் மருட்சியும் அடையும்படி நம் நாட்டிற் பெண்கள் சமூகம் கல்வியிற் சிறந்து ஒவ்வொரு துறையிலும் முன்னேறியுள்ளமை தற்கால நாட்டு வரலாறுணர்ந்தவர்கள் நன்கறிவார்கள்.

மனை மாட்சியி லிருந்துதான் நாட்டு மாட்சிமை உருவாகின்றது. இஃது அறிஞர் யாவர்க்கும் ஒத்த கருத்தாகும். பிசிராந்தையார் என்னும் புலவர் பெருமான் கருத்துப்படி, ஒருவன் மகிழ்ச்சியுடன் வாழ முதலாவதாக மனைவியும் மக்களும் மாட்சிமை யுடையரா யிருத்தல் வேண்டும். அத்தகைய மாட்சிமை எங்ஙனம் வரும்? கல்வியின்றி மாக்களாக வாழும் போதா? இல்லை; கல்வியறிவு பெற்றுத் திகழும்போதுதான் என்பது உறுதி.

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

'ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே' என்னும் புறநானூற்றுக் கருத்துப்படி வருங்கால உலகச் சிற்பிகளான மக்களை வளர்க்கும் கடமையிற் சிறந்த தாய்மார் கல்வியறிவு பெறுவிடின் தம் மக்களை நல்ல முறையில் வளர்க்க முடியாதல்லவா! கல்வியறிவு சாலாத தாய்மாரால் வளர்க்கப்படும் மக்கள் குருடரால் அழைத்துச் செல்லப்படும் குருடரே யாகிப் பாழ்படுவர்.

கல்வியறிவில்லாத மனைவி, மனைக்கு விளக்கமாகத் திகழ முடியாது, கொண்டான் குறிப்பறிதல், வருவாய்க்குத் தக்க செலவு செய்தல், ஒழுங்கமைப்புகள் வகுத்துக் குடும்பத்தைச் செவ்வனே நடத்துதல் ஆகிய செயல்கள் அவளால் ஒருபோதும் கூடா. தன் கணவன் கவலையுற்றுச் சோர்ந்திருக்கும் போது எழுச்சியூட்டும் இன்னுரை புகன்றும், ஆய்வுரைகள் நல்கியும் அவனுக்கு எக்காலத்தும் உசாத்துணையாக இருத்தலும் அவளாற் கூடா. கல்வியறிவில்லாதவள், குடும்பத்துக்கு உதவியாக இருத்தற்குப் பதில் 'இவள் ஒரு பெருஞ்சுமை' என்று கணவன் கருதும்படி வாழ்பவளேயாவள்.

கற்றறிந்த கணவனும் மனைவியும் நடத்தும் குடும்பம் எப்பொழுதும் கவலை யறியாதது. மகிழ்ச்சி நிறைந்தது. அறிவு மாட்சிமை அக் குடும்பத்தில் ஆட்சி கொள்ளும். கணவன் மனைவிக்கிடையில் நிகழும் உரையாடல்களும் அறிவும் மகிழ்ச்சியும் புலப்படுவனவாய் இருக்கும் அவர்கள் கண்காணிப்பில் வளரும் இளங்குழந்தைகளும் தொடக்க முதலே அறிவு மாட்சிமை யுடையராய் வளர்தல் கூடு மன்றோ!

கல்வியறிவில்லா மனைவி, எடுத்ததற்கெல்லாம் வீண் அடம் பிடிப்பதும் வீணாரவாரங்களில் ஈடுபடுதலும், வருவாய்க்கு மிக மிஞ்சிய வீண் செலவுகளைச் செய்யுமாறு கணவனைத் தூண்டுதலும் இயல்பான நிகழ்ச்சிகளாகும். கல்வியறிவின்மையே இத் தவறுகளுக்குக் காரணம் ஆகும்.

பெண்களுக்குக் கல்வியால் பயன் யாதென்று வீண் ஆராய்ச்சி தேவையில்லை. நல்ல கல்வி யறிவு பெற்றுக் குடும்பத்தில் கணவனோடு ஒன்றி யிருந்து செய்யத் தக்க நல்லறங்களைச் செவ்வனே செய்து இன்பம் அடைவதே பெரும்பயனாகும்.

பெண் மக்கள், தியாகம், பொறுமை இவைகளிற் சிறந்தவர்.

'அன்புடைக் கணவர்
அழிதகச் செயினும்
பெண்பிறந் தோர்க்குப்
பொறையே பெருமை'

என்று பெருங்கதை கூறுகின்றது. வீரம் தியாகம் இவைகளில் ஆடவரைவிடப் பெண்களே சிறந்தவர் என்பது காந்தியடிகளின் கருத்துமாகும். இத்தகைய தியாகம் பொறுமை, வீரம் ஆகிய சிறப்புக்கள் கல்வியறிவினால் எவ்வளவு மேம்பட்டுத் திகழும் என்பதை உணர்த்தலும் வேண்டுமா!

"ஞானம் நல்றம் வீரசுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின்
குணங்களாம்"

என்னும் பாரதியாரின் 'புதுமைப் பெண்ணை'ப் போன்று ஒவ்வொருவரும் தேசுடன் திகழக் கல்வியறிவு நல்ல முறையில் பெறுதற்கு ஒவ்வொருவரும் தக்க முயற்சிகள் மேற் கொள்ள அறைவன் அருள் புரிவாராக.

வாழ்க பெண்கல்வி! வெல்க பெண்குலம்!

நஞ்சன் கூடுபல்பொடி
பாக்டெரியாரின்


யுனைடெட் கன்ஸர்ன்,
54; பந்தர் தெரு, :: சென்னை-1

# வையை நீர் செய்யும் இடர்

(சி. து. க.)

“வரவே முடியாதா?”

“ஆம், வர முடியாது; எனக்காக நின் மகிழ்ச்சியைக் கெடுத்துக் கொள்வானேன்; நீ போய் நீராடு.”

“என் இந்தப் பிடிவாதம்! வைகறையில் நீராட அழைத்த போது புள்ளிமான் போலத் துள்ளி ஓடிவந்த நீ ஆற்றைத் தொலைவில் கண்டதும் கொடுவரி வேங்கையைக் கண்டது போல் மருளுவானேன்.”

“நான் ஒன்றும் மருளவில்லை. நீ நீராட அழைத்ததும் பெரு மகிழ்ச்சியோடு எழுந்து வந்தது உண்மைதான்; ஆனால்...........”

“இப்போது இக் கலக்கத்தின் காரணம்!”

“என் மனப்புயல் உனக்கொன்றும் தெரியாது; தெரிந்தால்....”

“வற்புறுத்தி அழைக்கமாட்டேன் என்பாய்; அவ்வளவு தானே!”

“ஆம்; அழைக்க மாட்டாய்; அழைக்காததுமன்றி எனக்காக இரக்கமும் கொள்வாய்! கண்ணீர் பெருக்குவாய்!”

“ஆ! அவ்வளவு துயரச் செய்தியா அது!”

“துயரச் செய்தி மட்டுமன்று; அது என்போன்ற மகளிர்க்குப் பிறவிதோறும் தொடர்ந்து வரும் கொடுமைப் பெருந்தீ! எண்ண எண்ணப் பெருகும் துன்பப் போராறு”

“தோழீ! நின் புதிர்மொழிகள் எனக்கொன்றும் விளங்கவில்லை. நின் உயிரனைய என்னிடங்கூடவா கரவு! கலந்து பேசத் தயங்குவதேன்?”

“தயங்கவில்லை; ஆனால் பேசி அடையும் பயன்!”

“ஏன், என்னால் உனக்கு ஆறுதல் கூற முடியாதென்கிறாயா.”

“கூறமுடியும்; ஆனால், நேற்றுக் காலையில் நீராடு துறையில் நடந்த நிகழ்ச்சிகளை எண்ணும் போது...........”

“என்ன நிகழ்ந்தது! நேற்று இதே நேரத்தில் மகளிர் எல்லாரும் ஒன்று சேர்ந்து மகிழ்ச்சியோடுதான் நீராடினோம்.”

“அப்போது ஒன்றும் பேச்சு நிகழவில்லையா?”

“இதென்ன கேள்வி! புதுப்புனல் ஆடுகையில் மகிழ்ச்சியோடு ஏதேதோ பேசித்தான் இருப்போம். தனிப்பட யாரைக் குறித்தும் பேசியதாக நினைவில்லையே”

“எப்படி நினைவிலிருக்கும். கொடுமையே எக்காலமும் கருதும் மகளிருடன் பழகும் உனக்கும் அவர்கள் குணம் நல்லதாகத் தோன்றுவதில் வியப்பில்லையல்லவா!”

“ஓ! இப்பொழுது புலனாகிறது; களிதுளும்ப நீராடிய போது மன்னன் தொடர்பாக மகளிர் ஏதோ சொன்னார்களே அதனைச் சொல்கிறாயா!”

“ஆம் ஆம், அதுவேதான்; அது எளிய பேச்சென்று நினைக்கிறாயா?”

“எளிதோ வலிதோ; எனக்கொன்றும் அவர்கள் பேச்சில் தீமை ஒன்றும் தோன்றவில்லை. ஏதோ மகிழ்ச்சியில்...........”

“வாய்க்கு வந்ததெல்லாம் பிதற்றலாம் என்கிறாயா? இவர்கள் நாவின் நீளம் தெரிந்தும் இவர்களோடு நீராட வந்த என் பேதைமையை என்னென்பது!”

“அப்படி அவர்கள் என்ன சொல்லி விட்டார்கள்? ‘மாறனுக்குரிய வையைப்புனல் குளிர்ச்சியும் மகிழ்ச்சியும் தருவதாகும் என்று கூறினார்கள். இது பொதுக் கருத்துத்தானே! இதனால் உனக்கென்ன தீங்கு.”

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில் சிறந்தது எங்கள் கிசான் டிரேட்மார்க்


பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்குதெரு சென்னை 1.

"அவ்வளவுதான் நீ கவனித்தது! அம்மாதிரி சொல்லியவுடன் எல்லோரும் ஒரு முகமாக என்னைத் திரும்பிப் பார்த்த பார்வை! அம்மம்ம! நினைத்தால் நெஞ்சு பொறுக்கவில்லையே."

"அவர்கள் சொல்லும் பார்வையும் நீ வழுதிபால் கொண்ட காதலைச் சுட்டி எள்ளியதாக நினைக்கிறாயா?"

"ஆம்; அதில் எனக்கு ஐயமே இல்லை."

"நீயாக உன் உள்ளத்தை வாட்டிக் கொள்கிறாய்! மன்னன் வழுதிபால் நீ கொண்டுள்ள காதலின் சிறப்பை உள்ளபடி உணர்ந்துதான் மகிழ்ச்சியோடு சொன்னார்கள் என்று வைத்துக் கொண்டாற் போகிறது."

"எவ்வாறு கொள்ள முடியும்? அவர்கள் கூறுவது போல் அவர் அருள், முழுதும் எனக்கு வாய்த்தாலும் குற்றமில்லை. அதுதான் இல்லையே! நைந்துபடும் உள்ளத்துக்கு ஆறுதலாக இராதா என்று எண்ணி வையையில் நீராட வந்தால் இம் மகளிர் சொற்கள் என்னை எரியில் தோயத் தெடுக்கின்றன. நீராடாமல் இருப்போம் என்றாலும் உன் போன்றார் தொல்லை பொறுக்க முடியவில்லை. இவ்விரு வகைகளினும் அமைதி தராமொழியும் வையை நீர் செய்யும் இடரினை என்னென்பது!"

"தோழி! வருந்தற்க; மன்னன் அருளுக்கு முற்றும் தகுதியான உன் காதல் நினைவு விரைவில் நிறைவேறும் என்பதில் ஐயமில்லை. உன் காதலோ உண்மை வாய்ந்தது. இந் நிலையில் யாரோ பேதையர் சொன்னார்கள் என்பதற்காக மாறன் வையைப் புனல் தோய்ந்தாடும் இன்பத்தை இழந்து விடுவாயா!"

"உயிரனையாய்! நின் ஆதரவு மொழிகள் என் சோர்வினைப் போக்கிவிட்டன. வையைப் புதுப்புனலின் தோற்றமும் காலை யிளந் தென்றலும் நேற்றைய தினத்திற் காட்டினும் பெரு விருந்தாக இப்போது இன்பமளிக்கின்றன."

"வாழ்க நின் காதல்! மாதர் எல்லாரும் நீராடித் திரும்புகிறார்கள். வெயிலேறுமுன்னம் நீராட விரைவோமாக."

* * *

வையை ஆற்றுப் புதுப் புனல் திரைசுழித் தோடுகின்றது. இலக்கியப் பெருஞ் சிறப்பு வாய்ந்த திருமருதத் துறையில் மதுரைவாழ் மகளிர் களித்தும் நகைத்தும் கதைபல பேசியும் நீராடுகின்றார்கள். நீராடு துறைக்குச் சிறிது தொலைவில் மன்னன் வழுதிபால் காதலுற்ற பெண்ணொருத்தி நீராடத் தன் தோழியோடு வந்தவள், ஏதோ நினைத்துத் திடுமென்று நிற்கிறாள். தோழி பன் முறை அழைத்தும் வர இசையவில்லை. அவ் விரு மகளிர்க் கிடையில் நடைபெற்றதாக மேல் எழுதிய உரையாடலின் கருத்து, கீழ்ச் செய்யுளிற் காணப்படுதல் காண்க!

எற்பக் குடைந்தாடில் ஏசுவர்
அல்லாக்கால்
மாற்றி யிருந்தாள் எனவுரைப்பர்—
வேற்கண்ணாய்!
கொல்யானை மாறன் குளிர்புனல்
வையை நீர்
எல்லாம் எனக்கோ ரிடர்.

—முத் தொள்ளாயிரம்.


# குருகுல - - - வெளியீடுகள்

1. ஒளி வழிபாடு
விலை அணா 6.

2. திருமூலர் அருள்மொழிகள்
விலை அணா 4.

3. தணிகைமலை அல்லது அமைதி
விலை அணா 6.

4. திருக்கழுக்குன்றப் பதிகம்
விலை அணா 2.

5. கருக் கலை
விலை அணா 4.

6. மூன்று உண்மைகள்
விலை அணா 3.

7. இராமலிங்க அடிகள் வரலாறும் திருவருட்பா ஆராய்ச்சியும்
விலை அணா 9.

8. முல்லைப்பாட்டு அகராதி
விலை அணா 8.

9. தொல்காப்பியம் அகத் திணையியல் விளக்கம்
விலை ரூ. 1.

10. ஆத்திசூடி - கருத்துரை
விலை 0-0-3.

கிடைக்கும் இடம்:

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம், P. O., (S.I.R.)

## நிலவுக்கு - - - - - -

### 6

### [வேதனை]

சேல்விழித் தோழி!

வீரன் வலிமையை விரும்புவான்; தேசியவாதி புகழை விரும்புவான்; தமிழறிஞன் தமிழ்ச் சுவையை விரும்புவான்.

வண்டு, மலரின் தேனை விரும்பும். மயில் கார்கால ஆடலை விரும்பும்.

தோழீ! நான் உன் 'வாடல்' தன்மையின் காரணத்தை அறிய விரும்புகிறேன்.

'அன்பு வெள்ளத்தில் இன்பமாக மிதந்து, ஓடமெனத்தான் சென்று கொண்டிருக்கிறது எங்கள் இல்லற வாழ்வு. ஆனால் சிறிது மாறுதல். சந்தேகப் புயல் கிளம்பியிருக்கின்றது. எங்கே ஓடம் மூழ்கிப் பாழ்பட்டு விடுமோ என்று தளர்ந்த நம்பிக்கையைக் கொண்டுள்ளோம். வேறொன்றுமில்லை' என்றெல்லாம் எழுதியிருக்கின்றாய்.

உயர்ந்த உவமைதான். ஆனால் எனக்கு ஒன்றும் புரியவில்லையே! நேரான முறையில் கடிதம் எழுதுவாய் என்று தான் நினைத்திருந்தேன். ஆனால் அதற்கு மாறாக உன் துன்பத்தை மறைத்துத்தான் எழுதியிருக்கின்றாய். தோழி! சந்தேகப் புயல் எங்கிருந்து கிளம்பியிருக்கின்றது? ஏன் கிளம்பியிருக்கின்றது? யார் கிளப்பியது. யார், யார்மேல் சந்தேகங் கொண்டிருக்கிறாய்? அவ்வாறு கொள்வதற்குரிய காரணங்கள் என்னென்ன? புரியும்படி எழுது என்று உன்னைக் கேட்கிறேன் கெஞ்சுகிறேன். இல்லை—கட்டளையிடுகிறேன்—தோழி என்ற உரிமையோடு.

'பாராளும் மன்னன் ஏராளமாகத்தான் பணம் வைத்திருந்தான். அதைச் சீரான முறையில் செலவழிக்கத் தெரியவில்லை. மக்கள் வருந்தினர்' என்பதைப் போல்தான் அமைந்திருக்கிறது. எனக்கு நீ நேரான முறையில் பதிலளிக்காமல் இருப்பது. நீ எழுதியிருப்பதைப் புரிந்து கொள்ள முடியாமல் என் மனம் வேதனையடைகிறது.

இளவல் இளங்கோவுக்கு இரண்டு நாட்களாகக் கடுங்காய்ச்சல் கண்டிருக்கிறது. என்று எழுதியிருக்கின்றாய் நல்ல மருத்துவனிடம் காண்பித்துச் சிகிச்சை செய்திருப்பாய் என நம்புகிறேன்.

இப்போது கலாசாலைக்கு விடுமுறை விட்டிருக்கின்றனர். தாத்தாவுக்கு முழு ஓய்வு கிடைத்திருக்கிறது. நண்பர்களுடன் அளவளாவுவதும், புத்தகங்கள் படிப்பதுந் தான் அவருடைய தினசரி பொழுது போக்கு.

அன்றைக்கெல்லாம் வீட்டிலேயே இருந்தார் தாத்தா. மாலை மணி நான்கு இருக்கும். 'மெரினா'வுக்குக் கிளம்பு இளநகை என்றார். கடற்கரை வெளியிலே வெண்மணற் பரப்பிலே, சிறிது நேரம் மனவமைதியோடு காலம் கழித்திருக்கலாம் என்றார். கிளம்பினோம்.

அங்குக் கிழவர்கள் இருந்தனர். குழந்தைகள் ஓடி விளையாடின. காலத்தோடு கருத்தை ஒட்டிப் பேசும் ஆண் பாலரும் பெண் பாலரும் குழுமியிருந்தனர். தனிமை விரும்பிகளும் இருந்தனர்.

ஓயாத அலைகளின் 'ஓ' என்ற கூச்சல் கேட்டுக்கொண்டிருந்தது அந்த அலைகடலின் ஆரவாரத்துக் கருகில்தான் எத்தனையோ உள்ளங்கள் அமைதி கண்டு கொண்டிருந்தன.

ஆரவாரத்தினிடையே அமைதி; துன்பங்களினிடையே இன்பம் —இந்தவுலகமே விசித்திர மனப்பான்மை கொண்டது.

தாத்தா தனக்கு மிகவும் தெரிந்த, சிறிது தூரத்தில் உட்கார்ந்திருந்த ஒருவரிடம் பேசுவதற்குச் சென்று விட்டார். நான் மட்டும் தனியாக உட்கார்ந்திருந்தேன். ஒரு மணி நேரம் சென்றிருக்கும்.

நான் ஏதோ எண்ணத்தில் மூழ்கியிருந்தேன். எனக்குச் சிறிது தூரத்திற்கப்பால் சிரிப்பொலி கேட்டது. பழக்கமான சிரிப்பொலி.

மெதுவாக அந்தப் பக்கம் திரும்பினேன். நான் நினைத்தது உண்மை. அவள் சென்று கொண்டிருந்தாள். ஆனால் அவள் பக்கத்தில் யார்? அழகாக உடுத்தியிருந்தான். உண்மையாகச் சொல்கின்றேன்- அது வேணியல்ல

எனக்கு முன்னால் கடலை நோக்கிச் சென்று உட்கார்ந்தனர் அவர்களிருவரும்.

சே! இந்த உலகத்தையே நான் வெறுக்கிறேன். அது வரவரக் கெட்டு வருகிறதடீ!

தேன்மொழி இப்படிப்பட்ட இயல்பையுடையவளாக இருப்பாள் என்று நான் கனவிலும் எண்ணவில்லை.

அவன், தேன்மொழி உயரத்தினன்; வயதும் ஒன்றாகவேயிருக்கும் என்றுதான் எண்ணுகிறேன்.

அந்தத் திக்கிலிருந்து அடிக்கடி சிரிப்பொலி வந்து கொண்டிருந்தது. நல்லகாலமாக அவர்கள் என்னைப் பார்க்கவில்லை. அதற்கு வாய்ப்பும் அமையவில்லை.

நாங்கள் சிறிது நேரம் கழித்து வீட்டுக்குத் திரும்பி விட்டோம். தேன்மொழி அங்கிருந்தது தாத்தாவுக்குத் தெரியாது. அதுவும் ஒருவிதத்தில் நல்லதென்றே எண்ணுகிறேன்.

இப்படிக்கு வேதனைக்கடலில் மூழ்கியிருக்கும்.

—இளநகை.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்; தி.ச. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம், (அஞ்.)